பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 03 2026 SUNDAY 6 30 PM

**வணக்கம் - மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) தமிழகத்தில் காவல்துறை செயல்படுகிறதா என்பது கேள்விக் குறியாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3) திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

4) தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த ஏழு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) உலகக் கோப்பை டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நியூசிலாந்து இடையேயான இறுதியாட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டம் தொடங்கி, லட்சாதிபதி சகோதாரிகள் திட்டம் வரை, பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக கூறினார்.

ஊரக பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு இன்றியமையாதது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பெண்களுக்கு அனைத்து துறைகளிலும் மத்திய அரசு வாய்ப்புகளை வழங்கியுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், விளையாட்டு, பாதுகாப்பு, அறிவியல், ஊரக மேம்பாடு உள்பட பல்வேறு துறைகளில் பெண்கள் சாதனை படைத்து வருவதை சுட்டிக்காட்டினார்.

பெண்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பெண்களின் பொருளாதார மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்திற்கான இலக்கு, 6 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் நலனை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதையே இது எடுத்துரைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் காவல்துறை செயல்படுகிறதா என்பது கேள்விக் குறியாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் எல். முருகன் 60 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பெண்களின் தியாகத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை என்பதை கருத்தில் கொண்டு தான் முன்னாள் முதலமைச்சர் ஜெயல லிதா, மகளிர் மேம்பட்டிற்காக புரட்சிகரமான திட்டங்களை செயல்படுத்தியதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

விலைவாசி உயர்வால், குடும்ப தலைவிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் மேம்பாட்டிற்கு, அஇஅதிமுக எப்போதும் துணைநிற்கும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைக் கூட செயல்படுத்த திமுக மறுப்பதாகவும், இது கண்டிக்கத்தக்கது என்றும் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்,

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதற்கான அறிவிப்பினை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், கடந்த ஜனவரி மாதம் 3ஆம் தேதி வெளியிட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், இந்த திட்டம் இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு, சட்டப்பேரவை தேர்தலில் திமுக அரசுக்கு மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டுத் துறையில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், மத்திய அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் இன்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

கேலோ இந்தியா இயக்கத்தின் கீழ், சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நடைபெற்ற இந்த விளையாட்டு போட்டிகளில் பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மதுரையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவர்கள், மத்திய அரசு மேற்கொண்ட இந்த முயற்சிக்கு நன்றி தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – மகளிர் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நாகை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நீல கடற்கரைப் பூங்கா, சுற்றுலா பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கான பல்வேறு வசதிகள் இந்த பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்-செல்வன் ஜெபராஜ் 41 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த ஏழு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - துரை 28 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு பாலங்களை மாநில அமைச்சர் திரு. T.R.B. ராஜா இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பிரதமரின் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ், இணையதள மேம்படுத்துநர் பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், அண்ணா பல்கலைக்

கழக உறுப்பு கல்லூரியை தொடர்பு கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி. சினேகா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திண்டுக்கல்லில் மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகளை உதவி ஆட்சியர் திருமதி. வினோதினி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலகக் கோப்பை டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நியூசிலாந்து இடையேயான இறுதியாட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>><<<<<<

உலக கோப்பைக்கான மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டி இன்று ஹைதராபாத்தில் தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் Uruguay-வை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

Kalaburagi சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishnavi Adkar பட்டம் வென்றார்.

>>>>>>end<<<<<<